சென்னிமலை ஊராட்சி ஒன்றியம்

ஓட்டப்பாறை ஊராட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திருமதி T.சுமதி தங்கவேல் அவர்கள்.

ந க எண் :01/ஓ.ஊ/2023 நாள்: 22.02.2023

பொருள் : மனைபிரிவு அங்கீகாரம் - ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் - ஓட்டப்பாறை ஊராட்சி- அட்டவணைப்பிடாரியூர் கிராமம் ரீ.ச.எண்: 272/ 3B- ல் 1.74 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமையும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் - சார்பாக.

பார்வை :

1. அரசாணை எண்: 255, ஊரகவளர்ச்சித்துறை ஊராட்சித்துறை நாள் : 13.10.2017
2. அரசாணை எண்: 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [UD4(3)] நாள் : 04.05.2017
3. அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை[UD4(3)] நாள் : 09.12.2020
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.621/2022 ஈம-2 நாள்: 12.12.2022
5. ஓட்டப்பாறை ஊராட்சி தீர்மானம் எண். 142 /2022 நாள்: 29.12.2022

உத்தரவு:

பார்வை 1 முதல் 4 வரையிலான கடிதங்களின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம் சென்னிமலை வட்டாரம் ஓட்டப்பாறை ஊராட்சி அட்டவணைபிடாரியூர் கிராமம் ரீ.ச.எண். 272/ 3B -ல் 1.74 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழல்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் (ம.வ/ஈ.மா எண் 318/2022) வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இம்மனைப்பிரிவுகளை அங்கீகரிக்கும் பொருட்டு இம்மனைப்பிரிவுக்கு சாலைகள் மற்றும் பொது இடங்கள் சென்னிமலை சார்பதிவக ஆவண எண் 3472/2022 நாள் 01.08.2022 ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. மின்சார வாரியத்திற்கு உரிய இடமும் சென்னிமலை சார்பதிவக ஆவண எண் 3473/2022 நாள் 01.08.2022 ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் உரிய அரசு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பூங்கா

பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகை ரூ365000/- உரிய அரசு தலைப்பில் மனுதாரரால் 23.11.2022 ல் செலுத்தப்பட்டுள்ளது. விதி எண் 3 ன்படி கூராய்வுக்கட்டணம் ரூ1000/- ஊராட்சிக்கு மனுதாரரால் 17.02.2022 ல் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 5-ல் காணும் கடிதத்தின்படி ஓட்டப்பாறை ஊராட்சி மன்றத்தின் தீர்மானமும் பெறப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்: 621/2022/ ஈம-2 நாள்: 12.12.2022 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனைப்பிரிவில் உள்ள 32 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
ஓட்டப்பாறை ஊராட்சி,
சென்னிமலை வட்டாரம்.

பெறுதல்
திரு R. பாலசுப்பிரமணியம்,
திரு B. தீபக் குமார்
49, அய்யாவு செட்டியார் வீதி,
திருப்பூர் ரோடு,
காங்கயம்.

நகல் : சார்பதிவாளர், சென்னிமலை.